(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 103.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2011, யூலை 07, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0586/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுதந்திரம் அடைந்தது முதல் ஏனைய நாடுகளுக்கு காணிகளை அன்பளிப்பாக இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், எத்தனை பேர்ச்சுகள் அல்லது ஏக்கர்கள் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அக் காணிகளை வழங்கியமைக்கான நோக்கம் என்னவென்பதையும்;

(iv) உள்நாட்டுக் காணிகள் வழங்கப்பட்ட அத்தகைய நாடுகளிடமிருந்து அதனையொத்த காணிகளை இலங்கை பரஸ்பரம் பெற்றுக்கொண்டதா என்பதையும்;

(v) ஆமெனில், பெற்றுக்கொண்ட காணிகளின் பரப்பளவு, திகதி, நாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0724/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி கடன் பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இக்கடன் வழங்கப்பட்ட வட்டி வீதம் யாதென்பதையும்,

(iii) கடன் வழங்கும் போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாதென்பதையும்,

(iv) இதுவரை மீட்கப்பட்டுள்ள கடன்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி கடன் பெறுநர்களிடமிருந்து கடனை மீள் அறிவடும் போது உத்தியோகத்தர்கள் தான்தோன்றித்தனமாக செயலாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0905/ '10

3.

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு கட்டங்களில் (அ.நி.சுற்றறிக்கை இல. 13 /2005 மற்றும் 21 / 2006 இன் கீழ்) நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(ii) மேற்படி அ.நி. சுற்றறிக்கையின் படி கல்வி அமைச்சின் செயலாளரது ED/2/29/4/1/46 ஆம் இலக்க 2005.07.19 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, 2005.07.28 ஆம் திகதி முதல் மேற்படி ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், 2003 – 2004 ஆண்டுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றுகின்ற சுமார் 50 ஆசிரியர்களுக்கு இது வரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, அக்கறைப்பற்று மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்;

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிரிப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

1174/ '11

4.

கௌரவ (வண.) எல்லாவல மேதானந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாட்டிலுள்ள தொல்பொருளியல் ஸ்தலங்கள் அனைத்தும் தற்போது ஆவணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி ஸ்தலங்கள் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் வேறு மத ஸ்தலங்கள் என்ற அடிப்படையில் தனித் தனியே இனங்காணப் பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) ஆமெனின், மேற்படி ஸ்தலங்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளௌவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1214/ '11

5.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சிறுவர் அபிவிருத்தி மகளிர் மேம்பாட்டு அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் இருக்கும் விதவைப் பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் யுத்தத்தின் காரணமாக விதவைகளாக உள்ள பெண்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அனைத்து விதவைப் பெண்களினதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1347/ '11

6.

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஆசிரிய சேவைக்குரிய, தற்போது நாட்டினுள் சேவையாற்றும் உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஆசிரியர்களில், மாகாண அரச சேவையிலும் மத்திய அரசின் கீழும் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) முழுக் கல்வி கட்டமைப்புக்கும் தேவையான உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) தற்போது கல்வித் துறையிலுள்ள உடற் கல்வி ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) அவ்வாறாயின், உடற் கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல்,ஏன்?

0723/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடத்திற்கு ஒரு தடவையாயினும் மேதகு ஜனாதிபதி அவர்கள் ஏற்றுமதிச் சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கியுள்ளாரா என்பதையும்;

(ii) அரசாங்க ஏற்றுமதிக் கொள்கைகளை வகுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர் யார் என்பதையும்;

(iii) அவ்வாறான கொள்கை உருவாக்கம் இறுதியாக எப்போது செய்யப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009, 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பணம் ஒதுக்கப்பட்ட கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆகியவற்றை ஆண்டுவாரியாகவும் நிறுவனவாரியாகவும்;

(ii) 2009, 2010 ஆம் ஆண்டுகளில் செஸ் வரிக்கு மீள் நிதியளிப்பதற்குப் பதிலாக அரசாங்கம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கிய பணத்தின் அளவை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0967/ '10

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட சலுசல நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2009 ஆம் ஆணடில் ஊழியர்களின் மிகைநிலை காரணமாக கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஊழியர்களின் மிகைநிலை காரணமாக ஊழியர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள வேளையில் புதிதாக ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருப்பின் அதன் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி புதிதாக நியமனம் பெற்றுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் கிடைக்கின்ற மொத்த மாதாந்த சம்பளத்தைத் தனித் தனியாகவும்;

(ii) அதற்கு மேலதிகமாக அவர்கள் பெறுகின்ற கொடுப்பனவுகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2009ஆம் ஆண்டு முதல் இற்றைவரை சலுசல நிறுவனத்தின் செலவில் நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் அல்லது செயலமர்வுகளின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நடத்துவதற்கான காரணங்களையும்;

(iii) அந்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(ஈ) இன்றேல் ஏன்?

1175/ '11

9.

கௌரவ (வண.) எல்லாவல மேதாநந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருளியல் இடங்கள் புதைபொருள் கொள்ளையர்களால் நாசமாக்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி இடங்களை புதைபொருள் கொள்ளையர்களிடமிருந்தும் ஏனைய இடர்களிலிருந்தும் பாதுகாப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1201/ '11

10.

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004 ஆம் ஆண்டு சுனாமி(ஆழிப்பேரலை) அனர்த்தத்தின்போது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு 460 வீடுகள் இன்னும் தேவைப்படுகிறதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) ஏறத்தாழ ஏழு வருடங்களாகத் தொடர்ந்தும் இடம்பெயர் முகாம்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதற்கென மேற்கொள்ளப் படவிருக்கும் நடவடிக்கை பற்றியும்;

(ii) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீடமைப்புத்தேவைகள் பூர்த்திசெய்யப் படுவதற்கான ஏதாவது காலக்கெடுவையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1348/ '11

11.

கௌரவ சாந்த பண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்பட்ட பயங்கரவாதம் முடிவடைந்த பின்னர் இந்நாட்டிற்கான வெளிநாட்டு பயணிகளின் வருகையில் வளர்ச்சிப் போக்கு அதிகரித்துள்ளதா என்பதையும்;

(ii) முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டில் சுற்றுலா பயணிகளின் வருகையின் வளர்ச்சி எவ்வளவென்பதையும்;

(iii) 2011ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினையும் அதன் ஒப்பீட்டளவிலான வளர்ச்சி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டுக்கு அழைத்துவருவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய வழிமுறைகள் யாதென்பதையும்;

(ii) இற்றையளவில் அவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இல்லையேல், அதற்குரிய காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0976/ '10

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கோல்டன் ரிலிப் ரிசோசஸ் நிறுவனம் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனம் எந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட கோல்டன் ரிலிப் ரிசோசஸ் நிறுவனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஒப்பந்தகாரராக பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பதிவு எந்த ஒப்பந்தக்காரர் தரத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கம்பனியினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1176/ '11

13.

கௌரவ (வண.) எல்லாவல மேதாநந்த தேரர்,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கோட்டேயில் தேசிய ஊழியர் சங்கத்தின் தலைமையகம் கொண்டு நடாத்தப்படுகின்ற நிலப் பரப்பு முக்கியமான தொல்பொருளியல் இடமாகும் என்பதையும்,

(ii) மேற்படி நிலப் பரப்பில் கோட்டே இராஜதானிக்கு உரித்தான தொல்பொருளியல் நினைவுச் சின்னங்கள் காணப்படுகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின் மேற்படி பெறுமதிமிக்க நிலப் பரப்பை விடுவித்து பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1345/ '11

14.

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— சமூகசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திடீர் விபத்தின்போது இரு கால்களிலும் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக நிரந்தர அங்கவீனராக உள்ள, தற்போது நிரந்தர வருமானமின்றி மிகவும் இக்கட்டான நிலையில் வாழ்க்கை நடத்தும் அக்குரஸ்ஸ, கொடபிட்டிய, கொடவத்தையில் வசிக்கும், மூன்று பிள்ளைகளின் தந்தையான திரு. எம்.எஸ்.எம். பஸ்லி, தமக்கு மாதாந்தம் ரூபா 3,000/= நிதியுதவியைப் பெற்றுத் தருமாறு அத்துரலிய பிரதேச செயலாளருக்கு 2010.09.08ஆம் திகதியிட்டு எழுத்து மூலமான வேண்டுகோளை விடுத்துள்ள போதிலும், இதுவரையிலும் அவருக்கு எந்தவிதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) நிரந்தர அங்கவீராகக் காணப்படும் திரு. பஸ்லிக்கு 2011 ஜனவரி மாதம் முதல், மாதாந்தம் ரூபா 3,000/= நிதியுதவியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1349/ '11

15.

கௌரவ சாந்த பண்டார,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகத்தர்களின் சேவையின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பெரும் உந்துசக்தி கிடைப்பதென்பதையும்;

(iii) சில பிரதேசங்களில் சேவைக்காக மேற்படி உத்தியோகத்தர்கள் இல்லாதிருப்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது காணப்படும் மேற்படி உத்தியோகத்தர்களுக்கான பற்றாக்குறையை நிரப்புவதற்கு எடுக்கப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ திளும் அமுணுகம,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக:-

"வரையறுக்கப்பட்ட கண்டி ஸ்ரீ புஷ்பதான சங்கத்தைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 3.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 9.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 13.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

நீதி அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம், 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 சனவரி 21 ஆம் திகதிய 1689/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும் 2011.06.21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

16.

அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

17.

பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0177/ '10

1.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஓகேவல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0178/ '10

2.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கட்டுவன பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0179/ '10

3.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வலஸ்முல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0180/ '10

4.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வீரகெட்டிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0181/ '10

5.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0182/ '10

6.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பலந்தொட்ட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா வென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?